503

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

ஆரம்பக்கல்வி இளங்கல்விமாணி (சிறப்பு) நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3234 – கலைத்திட்ட கற்கையும் செய்கையும் அழகியலும் ஆக்கக்கல்வியும்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

---

திகதி:- 03.02.2024 | நேரம்: பி.ப. 09.30 - பி.ப 12.30

---

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. அழகியல் கல்வி என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?
2. பிள்ளைகளின் சித்திரம் மற்றும் அவர்களின் ஆக்கச் செயற்பாடுகளை மதிப்பிடும் போது கருத்தில் கொள்ள வேண்டிய **மூன்று** (03) முக்கிய காரணிகள் யாவை?
3. தலை, கை மற்றும் இருதயம் பற்றிய 3H எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை காந்தியின் தத்துவார்த்த கருத்துக்களை அடிப்படையாக கொண்டு சுருக்கமாக விபரிக்குக.
4. ஹோவர்ட் கார்ட்னரினால் முன்மொழியப்பட்ட பன்முக நுண்ணறிவுக் கோட்பாட்டின் எட்டு (08) நுண்மதிகளை சுருக்கமாக விவரிக்குக.
5. முன்பள்ளி வகுப்பறைச் செயற்பாட்டின் போது, முன்பள்ளி பிள்ளைகள் ஆராய்ந்து மகிழ்வதற்கு ஏற்ற **ஐந்து** (05) இசைக்கருவிகளை விளக்குக.
6. ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளுக்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் போது ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டிய **மூன்று** (03) விடயங்களை குறிப்பிடுக.
7. கதை கூறும் முறையை உருவாக்கும் **இரண்டு** (02) முக்கிய கூறுகளை ஒப்பிடுக.
8. ஆரம்ப பாடசாலையில் அழகியல் கல்வி பாடம் வடிவமைக்கப்பட்ட **மூன்று** (03) முக்கிய கட்டங்களை ஆராய்க.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** இசை, தாள லயச் செயற்பாடுகளினூடாக விருத்தி செய்யக்கூடிய நான்கு (04) திறன்களை பெயரிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii.** பொருத்தமான செயற்பாடொன்றினை உதாரணமாக முன் வைப்பதனூடாக கவர்ச்சிகரமான, ஊக்கப்படுத்தக்கூடிய முன்பள்ளி / ஆரம்ப பிரிவு கற்றல் சூழலில் இசை, தாள லய நிகழ்வுகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என விளக்குக.

**(14 புள்ளிகள்)**

10.

**i.** கதை கூறலை பயன்படுத்தி பிள்ளையொன்றில் எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை சுருக்கமாக விபரிக்குக. **(08 புள்ளிகள்)**

**ii.** ஆசிரியர் என்ற வகையில் உங்கள் முன்பள்ளி / ஆரம்ப பாடசாலையில் மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்த கதை கூறல் எவ்வாறு திறம்படப் பயன்படுத்தப்படலாம் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(12 புள்ளிகள்)**

11.

**i.** அழகியல் செயற்பாடுகளை எளிதாக்கும் போது ஆசிரியர்களின் வகிபங்குகள் **நான்கினைச்** (04) சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**ii.** "அழகியல் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்பள்ளி பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன." மேற்கண்ட அறிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? பொருத்தமான உதாரணங்களுடன் உங்கள் பதிலை நியாயப்படுத்துக.

**(12 புள்ளிகள்)**

12.

**i.** பிள்ளையொன்றின் மொத்த விருத்தியில் (Total development) இசை மற்றும் அசைவின் பங்களிப்புகள் **நான்கினை** (04) பட்டியலிடுக?

(04 புள்ளிகள்)

**ii.** பிள்ளையொன்றின் மொத்த விருத்தியில் ஆக்கபூர்வமான இசை மற்றும் ஆக்கப்பூர்வமான அசைவு ஆகியவற்றின் பங்களிப்பு குறித்து நீங்கள் மேற்குறிப்பிட்டுள்ள **இரண்டு** (02) விடயங்கள் அடிப்படையில் கலந்துரையாடுக.

(16 புள்ளிகள்)

13.

**i.** முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வியில் பொம்மை அடிப்படையிலான கற்றலின் **நான்கு** (04) முக்கியத்துவத்தை பட்டியலிடுக.

**(04 புள்ளிகள்)**

**ii.** ஆரம்ப தரத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகளின் கீழ் ஒரு கருப்பொருளைத் தெரிவு செய்க, அழகியல் மற்றும் ஆக்கபூர்வமான விருத்தியை மேம்படுத்த **மூன்று** (03) செயற்பாடுகள் உள்ளடக்கிய பாடத்திட்டத்தை உருவாக்குக, உங்கள் பாடத்திட்டத்தில் பின்வரும் விடயங்களை உள்ளடக்குக.

(அ) தரம்

(ஆ) கருப்பொருள்

(இ) கற்றல் விளைவுகள்

(ஈ) கற்றல் கற்பித்தல் துணைச்சாதனங்கள்

(உ) நடவடிக்கைகளிற்கான படிமுறைகள்

(16 புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*